## தொழில்நிலை

1982 இல் அரச திணைக்களங்கள், அரசுசார் நிறுவனங்கள் (அரச கூட்டுத் தாபனங்களும் நியதிச் சட்ட சபைகளும்) நன்கமைந்த தனியார்துறை (ஊழியர் சேம நிதியத்திற்கு உதவுதொகை வழங்கும் தனியார் முயற்சிகள்) ஆகியவற்றில் தொழில்நிலை 34,000 அல்லது 2.1 சதவீதத்தால் அதிகரித்தது. தொழில் நிலையிலுள்ள இவ்வதிகரிப்பு மரபுவழி வேளாண்மை, அகழ்தலும் பார்குழி, சுய தொழில், கட்டடவாக்கம் போன்றவற்றை உள்ளடக்கவில்லை.

மத்தியவங்கியினால் நடத்தப்பட்ட தொழில்நிலை ஆண்டு அளவீடு அரசதுறையில் தொழில்நிலை 1981 இன் 5389 அல்லது 1.1 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 4337 அல்லது 1 சதவீதத்தால் உயர்ந்துள்ளதென்பதைக் காட்டியது. அரசுசார் துறைகளில் புதிய வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம் 1981 இன் 9077 உடன் ஒப்பிடுகையில் 4035 ஆக விளங்கியது. இது 1981 இன் 1.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 0.52 சதவீதம் மட்டுமேயாகும்.

நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலை 1981 இன் 26156 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 25625 ஆல் அதிகரித்தது. (தற்காலிக ஊழியர் சேமநிதிய தரவு) கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ்வரும் நிறுவனங்கள் 1982 இல் தொழில்நிலையை 5005 ஆல் அதிகரித்து கொ. பெ. பொ. ஆ. குழு நிறுவனங்களில் தற்பொழுது தொழிலிலமர்த்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையை 24926 ஆட்களுக்கு கொண்டுவந்தது. அரசு, அரசுசார் தொழில் நிலையுடன் ஒப்பிடும்போது நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலை மட்டம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. அரச செலவினங்கள் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டிற்குள் உட்பட்டதாக கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானங்கள், அரசுசார்துறைகளின் கொடுகடன் விரிவாக்கத்தின்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆகியன இத்துறையில் தொழில்நிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் காரணிகளில் சிலவாக இருக்கலாம்.

கிடைக்கத்தக்க தரவுகளின்படி 1978 இலிருந்து 1982வரையிலான கடந்த ஐந்தாண்டுக் காலப்பகுதியில் நன்கமையாத தனியார்துறை தவிர்ந்த மற்றையவற்றில் உருவாக்கப்பட்ட புதிய தொழில்களின் மொத்த எண்ணிக்கை 352,654 ஆக விளங்கியது.

## விலைகள்

1982இல் விலை நடத்தையின் ஓர் பண்பு விலைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிப் போக்காகும். குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், மத்திய வங்கியினால் கணிக்கப்பட்ட மொத்த விற்பனை விலைச்சுட்டெண் ஆகிய இரண்டும் முன்னைய ஆண்டிலும் பார்க்க 1981இல் விலை அதிகரிப்புக்கள் குறிப்பீடத்தக்களவு குறைவானதைச் சுட்டிக்காட்டின. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 18 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 10.8 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. உண்மையில் நுகர்வோர் விலைகள் 1982 திசெம்பரின் சுட்டெண்

புள்ளிக்கு புள்ளி அடிப்படையில் 1981 திசெம்பரைவிட 5.4 சதவீதம் மட்டுமே அதிகமாகவுள்ளது என்பதிலிருந்து 1982இன் குறைந்த அதிகரிப்பு வீதம் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது. மொத்த விற்பனே விலேச்சுட்டெண் 1981இன் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்களே அட்டவணே 1இல் காட்டப்பட்டவாறு அண்மைய ஆண்டுகளில் ஆகக் குறைந்ததாகும்.

அட்டவணே 1.30

**ஆண்டு சதவீத விலே அதிகரிப்புக்கள்**

| ஆண்டு | கொழும்பு நுகர்வோர் விலேச் சுட்டெண் | மொத்த விற்பனே விலேச்சுட்டெண் |
|---|---|---|
| 1978 | 12.0 | 16.0 |
| 1979 | 11.0 | 9.0 |
| 1980 | 26.0 | 34.0 |
| 1981 | 18.0 | 17.0 |
| 1982 | 10.8 | 5.0 |

விலேகளிலுள்ள இக்குறைந்த அதிகரிப்பு வீதம் அரிசி, சீனி ஆகிய முதன்மை உணவு விடயங்களின் குறைந்த விலேகளினதும் கோதுமைமாவின் நிலேயான விலேயினதும் விளேவாகும். 1981இல் அறிமுகப்படுத்திய கட்டுப்பாடான நாணயக் கொள்கைகள் தொடர்ந்து வந்ததும் இறக்குமதிப் பொருட்களின் விலேகளில் ஏற்பட்ட சிறிய அதிகரிப்புக்களும் இம்மிதமான விலே அதிகரிப்புக்களின்மீது பாதிப்பினே ஏற்படுத்தின.

முக்கிய உணவு விலேகளின் உறுதியான தன்மைக்கு பல காரணிகள் உதவின. இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் உற்பத்தியில் வீழ்ச்சி இருந்தபோதும் ஒப்பீட்டு ரீதியில் நிலேயான விலேகளில் அரிசி இறக்குமதிகள் கிடைத்தமை விலேகள் கணிசமானளவில் அதிகரிப்பதிலிருந்தும் தடுப்பதற்கு உதவின. வீழ்ச்சியடையும் பன்னட்டு விலேகளேயும் உணவு ஆணேயாளர் மேலதிக இருப்புக்களே குறைந்த விலேயில் வழங்கியமையினேத் தொடர்ந்து சீனியின் விலேயும் வீழ்ச்சியடைந்தது. கோதுமைத் தானியத்தின் இறக்குமதி விலே ஒப்பீட்டு ரீதியில் நிலேயானதாயிருந்தது. இதனுல் ஆண்டின் முதல் பத்து மாதங்களிலும் சந்தைப்படுத்தப்பட வேண்டிய கோதுமைமா விலேயில் அதிகரிப்பொன்றும் இல்லாதிருந்தது. கோதுமைமா விலே உண்மையில் 1982 ஒற்ரேபரில் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 6.65 இலிருந்து ரூ. 5.95க்குக் குறைக்கப்பட்டது. எண்ணெய் விலேகளின் நிலேயான தன்மையும் ஒரு பங்கைக் கொண்டிருந்தது. வாழ்க்கைச் செலவின்மீது நேரடியான தாக்கமொன்றைக் கொண்ட மண்ணெண்ணெய் விலேயும் உள்நாட்டுப்பண்டங்களின் போக்குவரத்துச் செலவின்மீது தாக்கமொன்றைக் கொண்ட டீசல், பெற்ரேல் விலேகளும் 1982இல் மாருதிருந்தன.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

*1974 = 100*

( மாதாந்தம் )




இலங்கை மத்திய வங்கி

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் பண்ட வகையான பகுப்பு விலைகளின் அதிகரிப்புக்கள் முக்கியமாக உள்நாட்டுத் தொகுதியிலும் இறக்குமதித் தொகுதியிலும் காணப்பட்டதை எடுத்துக்காட்டியது. அதிகரிப்பின் 72 சதவீதம் உள்நாட்டுத் தொகுதியின் உயர்விலைகளின் விளைவாயிருந்த வேளையில் 27 சதவீதம் இறக்குமதித் தொகுதியின் அதிகரிப்புக்களினால் ஏற்பட்டது.

மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணின் 5.5 சதவீதத்திலான மெதுவான ஆண்டு அதிகரிப்பு வீதம் உள்நாட்டு ஏற்றுமதித் தொகுதிகளின் விலைகளில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியிலான மிதமான அதிகரிப்பின் விளைவாகும். மறுபுறத்தில் இறக்குமதித் தொகுதியின் விலைகள் 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

நுகர்வுப்பொருட்கள், விலைகளின் அதிகரிப்பில் ஏற்பட்ட பெரும்பகுதிக்கு வகை கூறியதை பண்டவகைகளின்படியான முடிவுப் பயன்பாட்டுப்பகுப்பொன்று எடுத்துக்காட்டியது. அதிகரிப்பின் 82 சதவீதத்திற்கு நுகர்வுப்பொருட்கள் வகை கூறிய வேளையில் 13 சதவீதம் இடைநிலைப் பொருட்களின் விலை அதிகரிப்புக்களாலும் 5 சதவீதம் முதலீட்டுப் பொருட்களின் விலை அதிகரிப்பினாலும் ஏற்பட்டது.

அட்டவணை 1.31

தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சராசரி சில்லறை விற்பனை விலைகள்

1980 — 1982

| விடயம் | அலகு | 1980 ரூபா | 1981 ரூபா | 1982 ரூபா | ரூபாயின் மாற்றம் 1980–1981 | ரூபாயின் மாற்றம் 1981–1982 | சத வீத மாற்றம் 1980–1981 | சத வீத மாற்றம் 1981–1982 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி ... | இ.இ. ஒன்று | 4.71 | 6.25 | 6.56 | 1.54 | 0.31 | 33 | 5 |
| உயர்நில மரக்கறி வகைகள் ... | ,, | 4.42 | 5.17 | 6.01 | 0.75 | 0.84 | 17 | 16 |
| தாழ்நில மரக்கறி வகைகள் ... | ,, | 3.48 | 3.80 | 4.48 | 0.32 | 0.68 | 9 | 18 |
| பழச்சாறு ... | ,, | 4.09 | 5.27 | 5.60 | 1.18 | 0.33 | 29 | 6 |
| கடல் மீன் ... | ,, | 16.32 | 18.44 | 22.73 | 2.12 | 4.29 | 13 | 23 |
| இறைச்சி (மாடு, ஆடு, பன்றி, கோழி) ... | ,, | 19.67 | 22.92 | 26.54 | 3.25 | 3.62 | 17 | 16 |
| செத்தல் மிளகாய் .. | ,, | 28.07 | 27.93 | 30.02 | –0.14 | 2.09 | –0.5 | 7 |
| ஏனைய நறுமணப் பொருட்கள் ... | ,, | 45.61 | 48.09 | 56.91 | 2.48 | 8.82 | 5 | 18 |
| தேங்காய் ... | காய் ஒன்று | 1.49 | 1.75 | 1.57 | 0.26 | –0.18 | 17 | –10 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் நாடளாவிய தரவுசேகரிப்பு முறை.

மத்தியவங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்புத்திட்டத்தின் கீழ் நாட்டின் பிரதிநிதித்துவ பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட 1980, 1981, 1982இன் தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சராசரி சில்லறை விலைகள் 1982இல் அநேக நுகர்வு விடயங்களின் சில்லறை விலைகள் அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றன. எனினும் 1982இல் விலை அதிகரிப்புக்கள் அநேக விடயங்கள் 1981இலும் பார்க்க விகிதாசார ரீதியில் குறைவானதாகும். அரிசியின் சராசரி சில்லறை விலை 1981இன்

ரூ. 6.25இலிருந்து 1982இல் ரூ. 6.56 இற்கு 1981இன் 33 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 5 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. கடல்மீன், செத்தல் மிளகாய், நறுமணப்பொருட்கள், ஆகியவற்றிற்கு மட்டுமே விலை அதிகரிப்புக்கள் 1982இல் உயர்வாக விளங்கின. தேங்காயின் சராசரி சில்லறை விலைகளின் 10 சதவீத வீழ்ச்சியே குறிப்பிடத்தக்க விதிவிலக்காகும். இவ்வீழ்ச்சி ஓரளவிற்கு தெங்குப் பொருட்களுக்கான குறைவான பன்னாட்டு விலைகளின் காரணமாகும்.

தாழ்நில, உயர்நில காய்கறி விலைகள் இரண்டும் அதிகரித்த வேளையில் பின்னையது முன்னையதைவிட அதிகளவில் அதிகரித்தது. விலைகளில் அதியுயர் அதிகரிப்பு கடல்மீனிலும் இறைச்சி வகைகளிலும் காணப்பட்டது. 1982இல் கடல்மீன் உற்பத்தி கணிசமானளவு அதிகரித்த போதும் ஈடுசெய்ய முடியாத கேள்வி அதிகரிப்பினால் விலைகள் 23 சதவீதமளவில் உயர்ந்தன. கடல்மீனின் சராசரி சில்லறைவிலை 1981இன் கிலோக்கிராமிற்கான ரூ. 18.44 உடன் ஒப்பிடுகையில் ரூ. 22.73ஆக மிக உயர்ந்தமட்டத்தை பதிவு செய்தது, இறைச்சி (மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றி. கோழி) 1982இல் ரூ. 26.54ஆக விளங்கி 16 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டியது.

1981இல் மிளகாய் விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கிற்கு மாறான போக்கொன்று காணப்பட்டது. செத்தல் மிளகாயின் சராசரி சில்லறை விலைகள் 1982இல் 7 5 சதவீதத்தால் கிலோக்கிராமொன்றுக்கு ரூ. 30.00க்கு அதிகரித்தன. நறுமணப் பொருட்களின் சில்லறைவிலைகள் கணிசமானளவால் அதிகரித்தன. 1982இல் நறுமணப் பொருட்களின் சராசரிச் சில்லறைவிலை முக்கியமாக உயர்ந்த ஏற்றுமதி விலைகளின் விளைவால் கி. கிராமொன்றுக்கு ரூ. 56.91 ஆக 18சதவீதத்தால் உயர்ந்தன.

புடவைகளினதும் காலணிகளினதும் விலைகள் 1981இல் 5 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்தன. முக்கியமாக செங்கட்டிகள் உலோகம் மணல் ஆகியவற்றில் குறிப்பிடப்படும் கட்டடப் பொருட்களின் விலைகள் 16 சதவீதத்தால் அதிகரித்தன.

## கூலி

பொருளாதாரத்தின் நன்கமைந்த துறைகளில் மத்திய அரச ஊழியர்களுக்கும் கூலி நிர்ணசபைக்குட்பட்ட தொழிலாளர் ஆகியோருக்கானீ பணக்கூலிகள் ஆகக் குறைந்த கூலிவீத சுட்டெண்ணினால் அளவிடப்படுகின்றன.

கூலி நிர்ணயசபைக்குட்பட்ட அரச ஊழியர்களினதும் தனியார்துறை ஊழியர்களினதும் பணக்கூலியும் உண்மைக்கூலியும் 1982இல் அதிகரித்தன. எனினும் அரச ஊழியர்கள் திரட்டிய சம்பளத்தால் நன்மையடைந்தமையால் அரசதுறையிலுள்ள அதிகரிப்பு தனியார்துறையிலுள்ளதிலும் பார்க்க உயர்வாக இருந்தது.